# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,983 — 1933 ம் ஞூ வைகாசிமீ 26 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பில் கல்கந்த சந்தியில் மரக்கறிச் சந்தைக்கும் கற்கூசுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 47. குறிச்சி—பொலவலான 2 ம் பகுதி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தோம்பககவத்த இறை வரி இலக்கம் 114 இன் பகுதி | தென்னங்காணி, 33 தென்னையும் 4 தென்னங்கன்றும், 16 கமுகுவும், 6 கமுகம் கன்றும், 3 தோடையும், 1 பெல்லிமரமும், 1 பலாவும், 3 வாழைஅடியும், 1 கிடுகுக் கூரைவீடும் கட்டிடச்சுவரும், 1 கிடுகுக்கூரை குசினியும் மண்சுவருமுள்ளது | கம்மாலவிதரணகே யேம்ஸ் பேர்நாந்து பொலவலான 2 ம் பகுதி மனன்னைதலாகே உகுபொன்சேக, குறன் 3 ம் பகுதி | 0 1 6·84 |
| 2 | நகேகும்புறவத்த இறை இலக்கம் 116 இன் பகுதி | தென்னங்காணி, 7 தென்னையும், 5 தென்னங்கன்றும், 3 கமுகுவும், 4 கமுகம் கன்றும், குழியின் பகுதியும், ஒரு கட்டிய கிணறும், கட்டிடவாய்காலும் வண்டிப் பாதையின் பகுதியுமுள்ளது | நானன்னைதலாகே மருசிலீனு பொன்சேக, குறன 2 ம் பகுதி | 0 0 24·75 |
| 7 | தோம்பககவத்த இறை வரி இலக்கம் 115 இன் பகுதி | தோட்டம், 1 கமுகமரமும், ஓட்டால் வேய்ந்த கட்டிடச் சுவருள்ள கடையும் உள்ளது | மல்னைதலாகே அசலின்பேர் நாந்து லியனகேமுல்ல | 0 0 3·91 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஞூ ஆவணி மாசம் 25ந் தேதியிலன்று 11 மணிக்கு நீர்கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஆண்டு வைகாசிமீ 23 ந் தேதி.

ஆர். எஸ். வீ. பொலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பில் சீ ஸ்றீற்றில் பொதுப் பாவிப்பு கற்கூசுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 48. குறிச்சி—சீ ஸ்றீற், நீர்கொழும்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சூரியககவத்த அல்லது வெல்ல பொட்வத்த இறைவரி இலக்கம் 102 | தென்னங்காணி, 7 தென்னையுள்ளது | வர்ணகுலசூரிய எலிசபெத் பேர்நாந்து இது வர்ணகுலசூரிய ஹாசியா பேர்நாந்துவால் சொந்தம் பேசப்படுவது | 0 1 1·14 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | பன்குறவத்த இறைவரி இலக்கம் 89 இன் பகுதிகள் | தென்னங்காணி, 2 தென்னையும் ஒரு தென்னங்கன்றும் உள்ளது | வர்ணகுலசூரிய ஜெமானியா பேர்நாந்து, வர்ணகுலசூரிய மேரியா பேர்நாந்து; வர்ணகுலசூரிய பேதுருபேர்நாந்து, லீயோ அப்புவும் | 0 0 2·56 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஞூ ஆவணி மாசம் 25 ந் தேதியிலன்று 12 மணிக்கு நீர்கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஞூ வைகாசிமீ 23 ௳.

ஆர். எஸ். வீ. பொலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாணந்துறை புகையிரத ஸ்தானத்தைப் பெருப்பிக்கும் பொருட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 19,806. குறிச்சி—பட்டியா வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 44 | தொம்பகஹவத்தை வரி இல. 593. | 30–50 வயதான 6 தென்னமரமும் 30 வயதான 1 ஈரப்பலாவும் உள்ள தென்னந்தோட்டம் | ஜி. மாதியா பிறனாந்து | 0 0 15·82 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஞூ ஆடி மாசம் 8 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு களுத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறை கச்சேரி,
1933 ம் ஞூ வைகாசிமீ 18 ௳.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மிருசுவிலில் ஒரு சந்தை திறப்பதாகிய பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல A 232. குறிச்சி—மிருசுவில்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | செம்பாடு .. | 25 வயசுள்ள 4 தென்னமரங்களும் 10 வயசுள்ள ஒரு தென்னமரமும் கொண்ட தோட்டம் | யாட்பாண கத்தோலிக்க மேற்றிராணியார் | 0 1 5·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஞூ (ஜூன்) ஆனி மாசம் 19 ந் தேதியிலன்று 10 மணிக்கு யாட்பாண கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணியின் உறுதிகளைக் கொணர்ந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாட்பாணக் கச்சேரி
1933 ம் ஞூ வைகாசிமீ 18 ௳.

ஈ. டீ. டைசன்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொகொரவாவில் புதுப்பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 315. குறிச்சி—இகளபொகொரபாவ.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 113A | கனத்தேவத்த .. | தோட்டம் .. | ஜீ. கே. டிங்கிரி மகாத்தேயாவும் மறுபேரும் .. | 0 2 3 |
| 113B | ஷை .. | ஹேட்டு (பாகம்) .. | ஷை .. .. | 0 0 2·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ ஆனி மாசம் 27 ௳ தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1933 ம் ஹூ வைகாசிமீ 22 ௳.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசன்று.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பலங்கொடை—கல்தோட றோட்டு விசாலிக்க என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

ப்ரதமபடத்து இல. 4,174. குறிச்சி—வாலகாமுளவும் கோருேக்காமட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வோகாவத்த | றோட்டு | சீ. எல் எம். மரிக்காயரும் மறுபேரும் | 0 | 0 | 8·1 |
| 2 | பிடளியத்த | றோட்டு | பலாங்கொடை இந்துக்கோயிலின் பார்வைக்காரன் | 0 | 0 | 4·9 |
| 3 | ஷை | றோட்டு | ஏ. செல்லாச்சி | 0 | 0 | 1·2 |
| 4 | ஓரேன்ஜ்கில் | றோட்டு | எம். சிவாகொலொக்கு | 0 | 0 | 6·3 |
| 5 | ஷை | றோட்டு | ஷை | 0 | 0 | 13·3 |
| 6 | பள்ளியவத்த | றோட்டு | சீ. எல். எம். மரிக்கார் | 0 | 0 | 2·3 |
| 7 | குருன்னுன்சேகேவத்த | றோட்டு | டீ. எல். டேவீட் சில்வா | 0 | 0 | 2·9 |
| 8 | பத்தரகேவத்த | றோட்டு | சீ. எல். எம். மரிக்கார | 0 | 0 | 1·5 |
| 9 | ஷை | றோட்டு | ஏ. எம். அயிபூ | 0 | 0 | 0·2 |
| 10 | ஷை | றோட்டு | கே. அவ்துல் றசக் பாய் | 0 | 0 | 0·5 |
| 11 | ஷை | றோட்டு | எச். சீனியும் மறுபேரும் | 0 | 0 | 0·4 |
| 12 | ஷை | றோட்டு | ஏ. எல். அவுசா உம்மாவும் மறுபேரும் | 0 | 0 | 1 6 |
| 13 | ஷை | றோட்டு | சீ. எல். அவ்துல் லதீப் | 0 | 0 | 1·3 |
| | | ப்ரதமபடத்து இல. 482. குறிச்சி—கொருேக்காமட. | | | | |
| 4A | பேதல்கில் | றோட்டு | சீ. எல் எம். மரிக்கார் | 0 | 0 | 4·6 |
| 4B | வொச்கோம் எச்டேட் | றோட்டு | பொஸ்கொம தேதோட்டம் கொம்பனி லிமிட்டட் | 0 | 0 | 15·2 |
| 34A | கொருேக்காமடவத்த | றோட்டு | எச். எம். குணதிலகவும் மறுபேரும் | 0 | 0 | 12·2 |
| 47A | பொஸ்கொம தோட்டம் | றோட்டு | பொஸ்கொம தேதோட்டம் கொம்பனி லிமிட்டட் | 0 | 0 | 0·3 |
| 48A | ஷை | றோட்டு | ஷை | 0 | 0 | 1·5 |
| | | ப்ரதமபடத்து இல. 287. குறிச்சி—டெகிகஸ்தளாவ. | | | | |
| 10A | எறமேகும்புற | றோட்டு | ஏ. றத்தறனவும் மறுபேரும் | 0 | 0 | 5·4 |
| 44A | கல்போத்தேகும்புறே வத்த | றோட்டு | ஜே. வீ. ஜின்ஜற் | 0 | 0 | 2 |
| 46A | ஷை | றோட்டு | ஷை | 0 | 0 | 4 |
| 48A | ஷை | றோட்டு | ஷை | 0 | 0 | 7·4 |
| | | ப்ரதபடத்து இல. 289. குறிச்சி—கிரிமெடிதென்ன. | | | | |
| 3A | லன்காபறனவத்த | தேதோட்டம் | சீ. எல். எம். மரிக்கார் | 0 | 0 | 14 |
| 19A | கின்ததேனியேகொட வத்த | தென்னந்தோட்டம் | ஐ. எல். சயிறுடீன் | 0 | 0 | 3·7 |
| 19B | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 3·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஹூ ஆனி மாசம் 23 ௳ தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு பலங்கொட கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் த்ததமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1933 ம் ஹூ வைகாசிமீ 15 ௳.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் நி. 469 (வதுளை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணியிலேனும் அதன் எப்பங்குக்கேனும் அல்லது அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஹூ (மே) வைகாசிமீ 26 ௳ தேதியிலிருந்து மூன்று மாச மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ஹூ (ஏப்றில்) சித்திரைமீ 26 ௳ தேதியிலன்று வதுளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஜீ. த சொயிசா,
ஊவா மாகாண உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அதின் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளைவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமெனயுந்தை அறிந்துகொள்க.

அட்டவணை.

ஊவா மாகாணம், வதுளை டிஸ்திறிக் புத்தளைப் பகுதியைச் சார்ந்த புத்தளைக் கோறளையிலிருக்கும் ஒக்காம்பிற்றியா என்னும் கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் காணித்துண்டு: இக் காணிக்கெல்லை எல்லாப் பக்கங்களிலும் முடிக்குரியதெனச் சொல்லப்படும் கபேசமுக்கலானை என்னுங் காணி.

பிரதமபடம் இல. A 16.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கபேசமுக்கலானை, .. .. | 22 | 2 | 2 |

டிஸ்திறிக் றோட் கொம்மிற்றி அங்கத்தவரைத் தெரிவு செய்தல்.

*நுவரக்களாவி பகுதி டிஸ்திறிக் றோட் கொம்மிற்றி அங்கத்தவர் தெரிவு.*

இத்தால் அறிவிப்பது, 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1933 ம் ஆண்டு எஞ்சிய காலத்துக்கும் 1934 ம் ஆண்டுக்கும் நுவரகளாவிய டிஸ்திறிக் றோட் கொம்மிற்றியின் அங்கத்தவராயிருந்து தன் உத்தியோகத்திலிருந்து நீங்கிய வடபகுதி நீர்ப்பாச்சலத் தலைமை இஞ்சினீர் ஜே. எச். வில்சன் அவர்களுக்குப் பதிலாக அங்கத்தவராக வரவிரும்புவோர் தங்கள் எண்ணத்தைத் தெரிவுநாளுக்கு பத்து நாட்களுக்கு முன்பாக வடமத்திய மாகாணப் பிறவின்சியல் றோட் கொம்மிற்றியின் சங்கத் தலைவருக்கு எழுத்தி லறிவிக்க வேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 35 ம் பிரிவின்படி நுவரக்களாவி டிஸ்திறிக் றோட் கொம்மிற்றிக்கு ஓர் அங்கத்தவரை 1933 ம் ஆண்டு ஆனி மாதம் 6 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு அனுராசபுரக் கச்சேரியில் தெரிவு செய்யப்படும்.

சீ. எல். விக்கிரமசிங்க,
பிறவின்சியல் றோட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்,

பிறவின்சியல் றோட் கொம்மிற்றிக் கந்தோர்,
அனுராசபுரம். 1933 ம் ஆண்டு வைகாசி மாசம் 19 ந் திகதி.

உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

குருணைகலை டிஸ்திறிக் தம்பதெனி, ஹத்பத்துவே உடுகஹா, பஸ்ஹுஇரகோரளே யாறவிள்ளயில் இருக்கும் அதிகாரி, முதியான்சலாகே கிரிபண்டா திலகறத்ன ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ஸ்ரீ 1 ம் இலக்கத்தின் சட்டப்படி செடியூல் 1 Bன் 2 ம் பிரமானத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குபின், காலி டிஸ்த்திரிக்கில் சிங்கள பாஷையில் பிறசித்த நொத்தாரிஸ்வாக வேலை பார்க்கிறதற்கு ரிஜிஸ்ரூர் ஜெனரல் அவர்களுக்கு மனுச்செய்வேனென்று இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
ஏ. எம். கே. திலகறத்ன.

1933 ம் பங்குனிமீ 16 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.